Registerd as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தசீய தினசரி National Tamil Daily

மலர் 8 (18-4-66) இதழ் 70

பராபவ சித்திரை 5 துல்ஹஜ் பிறை 26 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன் 519
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## கிளே - கூப்பா மோதல்

லண்டன், ஏப். 17

அடுத்த மேமாதம் 21 அல்லது 28-ம் திகதியில், பிரிட்டிஷ் குத்துச்சண்டை சாம்பியன் ஹென்றி கூப்பருடன் பொருதி தனது சாம்பியன் பட்டத்தை நிலைநாட்டிக்கொள்ள உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் காஷியஸ் கிளே சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

இச் சண்டை நடைபெற்றால் 50 ஆண்டுகளுக்குப்

(6-ம் பக்கம் பார்க்க)

# பிக்கு ஞானசீக கைது

## சர்வாதிகார ஆட்சி தேவையென வாதாடியவர்

## புரட்சிசதி முயற்சி பற்றி மேலும் பல தகவல்கள்

கொழும்பு, ஞாயிறு

அரசியல் பௌத்தபிக்கு ஞானசீகதேரோ நேற்றிரவு கைதுசெய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டுவரப்பட்டார். இரத்தினபுரியிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த பௌத்தபிக்கு தேசீய அரசாங்கத்தை கவிழ்க்கவும் தேசீயஅரசாங்கத்தின் சில அமைச்சர்களைக் கைதுசெய்து கொலைசெய்யவும் சதித்திட்டம் வகுக்கப்பட்டதாகவும் இத்திட்டத்தை இவ்வருடம் பெப்ரவரி மாதம் 17-ந்திகதி நிறைவேற்றத் திட்டமிடப்பட்டதாகவும் கிடைத்த தகவலின்மீது நடைபெற்றுவரும் விசாரணையின் விளைவாக நேற்றிரவு கைதுசெய்யப்பட்டார். நேற்றிரவு அவர் களைப்படைந்திருந்ததால் அவரை இரகசியப்பொலிஸார் விசாரணை செய்யவில்லை.

நேற்றிரவு முதல் இன்று காலைவரை இரகசியப் பொலிஸாரின் தலைமைக் காரியாலயமான அரசாங்க புதிய அலுவலகக்கட்டடத்தின் நான்காவது மாடியின் ஓர் அறையில் பிக்குஞானசீக ஓய்வெடுத்துக் கொண்டார்.

வண. ஞானசீக தேரோ பொலிசாருடன் பேசவோ அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லவோ முதலில் மறுத்து விட்டார். ஆனால் கடைசி நேரத்தில் அவர் பொலிஸுக்கு வாக்குமூலமளிக்கத் தொடங்கியிருப்பதாதாக அறிவிக்கப்பட்டது.

சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த பிக்கு ஞானசீக அரசியலில் தீவிர பங்கெடுத்துவந்தவர். இலங்கைக்கு சர்வாதிகார ஆட்சியே மிகப்பொருத்தமானது என முன்பு பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதியும் மேடைகளில் பேசியும் வந்திருக்கிறார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவரான ஞானசீகதேரோ சோவியத் ரஷ்யாவுக்கும் விஜயம் செய்திருக்கிறார்.

பெப்ரவரி புரட்சிசதி முயற்சிசம்பந்தமாக இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் ஒப்படைக்கப்பட்டதுபோல் பிக்குஞானசீகவும் கடற்படையினரின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்படுவார்.

வர் இரத்தினபுரி ஸ்ரீ சுமங்கல வித்தியாலயத்தில் கடமையாற்றுபவர். பி. வி. டிங்கிரிமாத்தையா என்பவர் ஒரு வியாபாரி. மற்றும் நால்வரும் இராணுவப் பிரி[illegible]

## மகாநாயகதேரோ நாளை யாழ்ப்பாணம் வருகிறார்

### வரவேற்பளிக்க விரிவான ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

மல்வத்தை பீடாதிபதி வண. இராஜகுரு அமுனுகம ஸ்ரீ விபஸ்ஸிதேரோ, முதன்முதலாக யாழ்ப்பாணத்திற்கு நாளை மாலை விஜயம் செய்கின்றார். கிங்ஸ் ஹவுஸில் 3 நாட்கள் தங்கியிருக்கும் அவர், யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள பல இடங்களுக்கும் விஜயம் செய்வார். சகல சமயத்தவர்களும் அவருக்கு வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். நாளை மாலை யாழ்ப்பாணம் மாநகரசபை சார்பில் நகர மண்டபத்தில் பொது வரவேற்பொன்று அளிக்கப்படவிருக்கிறது.

19-ம் திகதி காலை 8 மணிக்கு கொழும்பு அத்தியட்சகுரு அதிவண. ஹரல்ட் டி.சொயிஸா பலாலிவிமான நிலையத்தை வந்தடைவார். சர்வமத காங்கிரஸ் உத்தியோகத்தர்கள் மகாநாயக்கதேரோவை வரவேற்பார்கள்.

மாலை 4-00 மணிக்கு மகாநாயக்கதேரோ இலங்கைஅரசாங்கத்தால் பிரத்தியேகமாக உதவப்பட்டுள்ள ஆர். ஏ. எவ். விமானமூலம் பலாலி விமானநிலையத்தை வந்தடைவார். இதைத் தொடர்ந்து மகாநாயக்க தேரோ சர்வமத காங்கிரஸின் மற்றைய சில முக்கிய பிரமுகர்களுடன் 4-30 மணிக்கு பலாலி விமான நிலையத்திலிருந்து மோட்டார்ரத பவனிமூலம் யாழ்ப்பாண நகரை நோக்கி அழைத்துச் செல்லப்படுவார்.

பி. ப 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரைக்கு விஜயம் செய்வார்.

மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகரசபையினால் நகரமண்டபத்தில் வைத்து பொது வரவேற்பளிக்கப்படும். அதைத் தொடர்ந்து திவ்வியஜீவன சங்கமும், முஸ்லிம் சங்கமும் வரவேற்பளிக்கும்.

20-ந் திகதி மகாநாயக்க தேரோவும் கொழும்பு அத்தியட்சகரும் நகருக்கு வெளியில் உள்ள சில முக்கிய இடங்களுக்கு விஜயம் செய்வார். 7-30 மணிக்கு தோலகட்டி மௌன சபையின் மடாலயத்தைப் பார்வையிடல். அங்கிருந்து மருதனுமடம் கிறிஸ்தவ தேவா ஆச்சிரமத்துக்கு விஜயம் செய்வார். காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையில் வைத்து இங்குள்ள பௌத்த மதஸ்தாபனங்கள் வரவேற்பளிக்கும். காலை 10-30 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலுக்கு விஜயம் செய்தல் முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரையில் தானம் வழங்கல்.

பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் சர்வமத காங்கிரசின் இரண்டாவது மகாநாட்டுக்குத் மகாநாயக்க தேரோ தலைமை வகித்து உரை நிகழ்த்துவார். கொழும்பு அத்தியட்சகர், யாழ்ப்பாணம் கத்தோலிக்க மேற்றிராணியாரும் பல மதசங்கங்களும் இம்மகாநாட்டில் கலந்துகொள்

(6-ம் பக்கம் பார்க்க)

புரட்சிச் சதி விசாரணை

## மேலும் 6 பேர் மீது தடுப்புக் காவல்உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

இவ்வருடம் பெப்ரவரி 17-ம் திகதி ஆரம்பிக்க திட்டமிடபட்டிருந்ததாகக் கூறப்படும் புரட்சிச் சதியில் சம்பந்தப்பட்டவர்களெனக் கூறப்படும் மற்றும் ஆறு நபர்கள்மீது தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் ரகசியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, விசாரணை செய்வதற்காக கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட ஆறு நபர்கள்: பீ. விஜயரத்ன, என். கொரலேச், எல். சில்வஸ்ரர் பருவத்த, எம் ஹென்றிக் சிங்கோ, ஏ. ஜோன், பி. வி. டிங்கிரிமாத்தயா.

சிங்கபிரிவைச் சேர்ந்த எஸ். பி. தகநாயக்காமீதும் தடுப்புக்காவல் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இன்று காலைவரை அவரின் இருப்பிடம் கண்டுபிடிக்கப்படவில்லை. தகநாயக்கா இன்று காலை 10-30 மணிக்கு இராணுவ நீதிமன்றத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது மறைந்துவிட்டார் என அறியப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட ஆறு நபர்களில் ஏ. ஜோன் என்ப[illegible]

## தலைமறைவான ராணுவ வீரர் பொலிஸில் சரண்

கொழும்பு, ஞாயிறு

தடுப்புக்காவல் உத்தரவு வழங்கப்பட்ட கப்டின் டி. ஸ். பி. தகநாயக இன்று வெள்ளவத்தை பொலிசாரிடம் சரண்புகுந்தார்.

புரட்சிசதி சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் தடுப்புக்காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளவர்களில் இவரும் ஒருவர்.

நேற்றுக்காலை இராணுவ நீதிமன்ற விசாரணையொன்றுக்கு வந்திருந்த திரு. தகநாயக்கா திடீரென மறைந்துவிட்டதால் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. நீதிமன்றத்தில் சட்டப் பிரச்சினைகள் சிலவற்றைப் பற்றி விவாதிப்பதற்காக திரு. தகநாயக்காவை வெளியில் இருக்கும்படி கூறப்பட்டதாகவும் பின்பு அவரின் பெயர் கூப்பிடப்பட்டபோது அவர் காணப்படவில்லையென்றும் கூறப்பட்டது. அவரைக் கண்டுபிடிக்க பொலிசார் தீவிரமுயற்சிகள் மேற்கொண்டிருந்த வேளையில் இன்று அவர் பொலிசாரிடம் சரண்புகுந்துள்ளார்.

மலேசியாவில்

## தமிழ் மொழிவளர்ச்சியில் அரசாங்கம் அக்கறை

### தமிழாராய்ச்சி மகாநாட்டில் பிரதமர் துங்கு விளக்கம்

கோலாலம்பூர், ஏப். 17

மலேஸியாவிலுள்ள தமிழ் மக்கள் சந்தோஷமாக வாழ்ந்துவருகிறார்கள். அவர்களின் மொழிகலாசாரவளர்ச்சிகளுக்கான எல்லா வசதிகளையும் செய்துகொடுப்பதில் எமது அரசாங்கம் அக்கறையோடு கவனம் செலுத்துகின்றது'' என்று மலேஸியப் பிரதம மந்திரி துங்கு அப்துல் ரஹ்மான் கோலாலம்பூரில் நடைபெறும் சர்வதேச தமிழாராய்ச்சி மகாநாட்டில் நேற்று உரைநிகழ்த்தியபோது கூறினார். மகாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ் மலேஸியப் பல்கலைக்கழகத்தில் தமிழராய்ச்சிக்கெனத்

(6-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ வீரர் மரணம்

### தீர்ப்பு இன்று வழங்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

புதிய மத்திய செயலகத்தின் நான்காவது மாடியிலிருந்து நேற்றுக்காலை கீழே குதித்து மரணமான இராணுவ வீரரான கோப்ரல் திலகவர்த்தனவின் மரணம் குறித்து கோட்டை மாஜிஸ்திரேட் இன்று பிற்பகல் விசாரணைகள் நடத்தினார். தீர்ப்புவழங்குவதை மாஜிஸ்திரேட் நாளைவரை ஒத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் பொறுப்பான முறையில் நடந்து கொண்டால்தான் ஜனநாயகம் சுமுகமாக நடைபெற முடியும்.
— காமராஜ்

ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49 JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 129

பராபவ ஆண்டு சித்திரை மீ 5 (18-4-66)

## கட்சி அரசியலும் தேசீயமும்

நாட்டின் சகல துறைகளிலும் கட்சி அரசியல் நுழைந்து அதன் விளைவாக எந்த நல்ல காரியத்துக்கும் இடையூறு அதிகரித்து நாட்டின முன்னேற்றம் பாதிக்கப்படுவதாகவும் அரசியல் போட்டிகளை மறந்து அனைவரும் நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டுமென்றும் இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் திரு ஹேமா பஸநாயக்கா உடகம்பொல என்னுமிடத்தில் ஒரு வைபவத்தில் கூறியிருக்கிறார். இந்தக் கட்சி அரசியல் வேற்றுமை போட்டியும் பொருமையையும் உருவாக்கி நல்ல கார்யங்களுக்குத் தடையாக இருப்பது இலங்கையில் மட்டுமல்ல புதிதாக விடுதலையடைந்து பார்லிமெண்டரி ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் மற்றும் சில நாடுகளிலும் இதே நிலை உள்ளது.

ஆசியாவில் மிகப் பெரிய ஜனநாயக நாடாக விளங்குவது இந்திய நாடு. இங்கு பல கஷ்டங்களையும் பிரச்னைகளையும் அந்நிய ஆக்கிரமிப்புகளையும் அந்நாட்டு மக்கள் எதிர்நோக்கிச் சமாளிக்க வேண்டியுள்ளது. நாட்டுக்கு வெளியிலிருந்து ஆபத்து ஏற்படும்போது அங்குள்ள கட்சிகளும் சகல மக்களும் ஆதரவும் ஒத்துழைப்பும் அளிப்பதாக அரசாங்கத்துக்கு வாக்குறுதியளித்தாலும் அந்த வாக்குறுதி அதிகநாள் நீடிப்பதில்லை. இந்தியாவில் அடுத்த வருட முற்பகுதியில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது இப்பொழுதே அங்கு தேர்தல் பிரசார இயக்கங்களும் முஸ்தீபுகளும் ஆரம்பமாகிவிட்டன. ஆளும் கட்சிக்கு எதிரான தேர்தல் கூட்டு முன்னணிகள் உருவாக்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன. ஜனநாயக நாட்டில் அங்குள்ள அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு ஏற்பாடு செய்வதோ, ஆளும்கட்சி அபேட்சகர்களுக்கு எதிராகத் தங்கள் அபேட்சகர்களை நிறுத்த முனைவதோ தவறல்ல; அது அவர்களது ஜனநாயக உரிமையும் கூட. ஆனால் நாட்டில் உணவுப் பற்றாக்குறை, வெளியார் ஆபத்து, பொருளாதாரக் கஷ்டம் போன்ற முக்கிய தேசீயப் பிரச்னைகள் பெரும் பிரச்னைகளாக உருவெடுத்திருக்கையில், தேர்தலில் எப்படியும் வெற்றி பெறுவதையே நோக்கமாகக் கொண்டு முயற்சி செய்வது தேசீய நலனுக்கோ, பார்லிமெண்டரி ஜனநாயகம் வெற்றி பெறுவதற்கோ நன்மை செய்யாது. இதனுல்தான் இந்தியாவின் பிரதம நீதியரசர் சமீபத்தில் ஒரு வைபவத்தில் பேசுகையில், இந்தியாவில் பார்லிமெண்டரி ஜனநாயகம் வளர்ச்சி பெற்றிருப்பினும் அரசியல் போட்டியும் பொருமையும் கட்சி அரசியல் ஜனநாயகத்துக்கு ஒரு சாபக்கேடாகத் தோன்றியுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தியா பல கோடி மக்களைக் கொண்ட பெரிய நாடு. இலங்கையோ ஒரு கோடி மக்களைக் கொண்ட சிறிய நாடு. இங்கு தேசீய ஐக்கியம் நிலவுமானுல் தேசீயப் பிரச்னைகள் அனைத்துக்கும் நிரந்தரத்தீர்வு கண்டு, காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா கூறியது போன்று, ஆசியாவின் சுவிட்ஸர்லாந்தாக விளங்க முடியும். துரதிர்ஷ்டவசமாக இங்கும் கட்சி அரசியல் ஒரு சாபக்கேடாகவே நிலைபெற்றுள்ளது. தேர்தல் காலத்துக்குமுன்னர் அரசியல் கொள்கைகளிலும் போக்கிலும் வேறுபாடுகளிருந்தாலும் தேர்தல் முடிந்தபின், ஆட்சிபீடத்திற்கு வரும் அரசாங்கத்துக்கு, நாட்டின் முக்கிய தேசீயப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டியது உண்மையான தேசாபிமானிகளின் கடமையும் பொறுப்புமாகும். இங்கோ போலித் தேசியவாதிகள் மலிந்துவிட்டதால், எந்த முக்கிய பிரச்னைக்கும் கட்சி அரசியல் முத்திரையிட்டு, நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது. நாடும் நாட்டுமக்களும் எப்படிப் போனாலும் போகட்டும். நாம் ஆட்சிபீடத்தில் எப்படியாவது அமர்ந்துவிடவேண்டுமென்பதே நமது அரசியல்வாதிகள் பலரினதும் ஒரே அவாவாகும்.

வேலையில்லாத் திண்டாட்டம் உச்சநிலையை அடைந்துள்ளது; பொருளாதாரக்கஷ்டம், வாழ்க்கைச்செலவு உயர்வு இன்னும் குறையவில்லை; உணவு மற்றும் பொருள்களுக்கு வெளிநாடுகளையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலை இன்னும் நீங்கவில்லை. இந்நிலையில், தேர்தல் முடிந்து ஓர் அரசாங்கம் அமைக்கப்பட்ட சில மாதங்களுக்குள்ளேயே அதற்கு எதிரான இயக்கங்களை ஆரம்பிக்கவும் நாட்டின் முன்னேற்றத்துக்கான நல்ல திட்டங்களை எதிர்க்கவும், மறைமுகமான திட்டங்கள் தீட்டவும் நம்நாட்டு அரசியல்வாதிகள் சிலரும் அரசியல்கட்சிகள் சிலவும் முன்வந்துள்ளது, நிச்சயம் நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல. இது ஜனநாயகம் வெற்றிபெறவும் ஏற்றதல்ல. இதே சமயம் ஆட்சிபீடத்திலமரும் அரசியல் கட்சிகளும் எதிர்க்கட்சியினரைப் பகைவராகக்கருதி முக்கிய பிரச்னைகளில் அவர்களைக் கலந்தாலோசனை செய்யத் தவறுவதும் நல்லதல்ல.

இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசரும் இந்திய பிரதம நீதியரசரும் நாட்டின் நலனைக் கருதி வெளியிட்டுள்ள அபிப்பிராயங்கள் நமது அரசியல் வாதிகளினதும் அரசியல் கட்சிகளினதும் சிந்தனையைத் தூண்டுவதாக இருக்கவேண்டும்.

# இராணுவசபை ஏற்படுத்த திட்டமிட்டிருந்தார்களாம்

## சதிபற்றி மேலும் தகவல்கள்

கொழும்பு, ஞாயிறு

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா, ஜே ஆர். ஜயவர்த்தனு, டாக்டர் என். எம். பெரேரா, திரு மொன்டேகு ஜெயவிக்கிரமா, திரு. பிலிப்குணவர்த்தனு, திரு. லெஸ்லி குணவர்த்தனு, திரு பெர்னுட் சொய்சா ஆகியோரைக் கைது செய்து கொலைசெய்ய புரட்சி சதித்திட்டம் வகுத்தவர்கள் முடிவு செய்திருந்ததாக, இதுபற்றி கிடைத்த தகவலிலிருந்து தெரியவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 17-ம் திகதியில் புரட்சி சதிநடத்த திட்டமிடப்பட்டிருந்ததாயும் அறியப்படுகிறது.

திரு. ஜி.பி.பி. சமரசிங்கா பிரிகேடியர் ரஸ்சல் கைன், திரு. ஜோன் அட்டிகலே ஆகியோரையும் கைது செய்து கொலைசெய்யத்திட்டமிட்டிருந்ததாகவும் அறியப்படுகிறது.

திட்டங்கள் யாவும் தற்பொழுது பாதுகாப்பில் இருக்கும் ஒருவரது வீட்டிலும் மற்றும் சில இடங்களிலும் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. இத்திட்டங்களின்படி இராணுவசபை ஒன்றை ஏற்படுத்தி நாட்டை ஆளவும், இச்சபையில் இராணுவ அதிகாரி ஜெனரல்றிச்சார்ட் உடுகமவையும் சேர்த்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டிருந்ததாகவும், பதிவு செய்யப்பட்ட ஒப்புதல்வாக்கு மூலங்களிலிருந்து அறியப்படுகிறது.

புரட்சி சதி சம்பந்தமாக ஞானசிக தேரோவுடனும், வெள்ளவத்தையிலுள்ள தியான நிலையத்தில் பேச்சுவார்த்தை நடந்ததாகவும், இரத்தினபுரியிலுள்ள அவரது கோவிலிலும் கூட்டங்கள் நடைபெற்றதாகவும் வாக்குமூலங்களிலிருந்து தெரியவருகிறது.

புரட்சிசதி திட்டத்தை உருவாக்கியவர்கள். நள்ளிரவில் ஞானசிகதேரோவை அவரது கோவிலில் சந்தித்ததாகவும், இவர்களை சந்திப்பதற்கு தேரோ தலையையோர் சேலையால் போர்த்திக் கொண்டு வருவாரென்றும் ஏற்பாடு இருந்ததாகக் கூறப்படுகிறது.

வெள்ளவத்தை தியான நிலையத்தில் நடைபெற்ற கூட்டங்களில் தேரோ சீக்கிரம் திட்டத்தை அமுல்செய்யுங்கள் என்று திட்டத்தை உருவாக்கியவர்களிடம் கூறியதாகவும், பார்த்துப்பாராமல் பணம் செலவிடப்பட்டிருப்பதாகவும், போக்குவரத்துக்கு கார் வசதியளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

புரட்சிசதியில் ஈடுபட்டவர்களுக்கு பட்டிகள் வழங்கப்பட்டதாகவும், ஒப்புதல் வாக்குமூலங்களிலிருந்து தெரியவருகிறது.

கோட்டை புகையிரத நிலையத்திற்குமுன்னுல்உள்ள கட்டடத்தில் நள்ளிரவில் சந்திப்பதற்கு திட்டத்தை உருவாக்கியவர்கள் தீர்மானித்திருந்ததாகவும் தெரியவருகிறது

ஒருவெளிநாட்டு செய்திஸ்தாபன ஊழியர்களால் இதற்கான பட்டிகள் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது

புரட்சி சதி திட்டத்தை உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்கள் அறிந்து வெளிவிவகார பாதுகாப்பு அமைச்சில், நிரந்தர காரியதர்சியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதிட்டங்கள் பற்றி ஆலோசிக்கிறார்கள் என்பதை திட்டத்தை உருவாக்கியவர்களில் ஒருவர் அறிந்துகொண்டதால் தற்காலிகமாக புரட்சி சதித்திட்டத்தை கைவிட்டனா என்றும் செனட்டர் டொறிக்டீ சூஸா புரட்சிசதிபற்றிது றமுக கார்ப்பரேசன் தலைவர் திரு. சந்திரசோமாவிற்கு கொடுத்த தகவலைத் தொடர்ந்து உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்கள் இதுபற்றி ஆலோசனை செய்தனர் என்றும் தெரியவருகிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

# சர்வசமய காங்கிரஸ்

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் சர்வசமயக் காங்கிரஸ் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றுகும். சர்வசமய காங்கிரசின் தோற்றம் தேசிய, ஆத்மீக கலாச்சார சமூக ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வித்திட்டுள்ளது. மேலும சமூகத்தினரிடமும் பரஸ்பர நல்லெண்ணத்தையும் அளவிட முடியாத நன்மையையும் ஏற்படுத்த சந்தர்ப்பம் ஏற்படுத்தியுள்ளது. மல்வத்தை மகாநாயக தேரோவின் யாழ்ப்பாணம் விஜயமும் மற்றும் உலகப் பிரசித்திபெற்ற சமய பற்றுக்கொண்ட அறிஞர்களினதும் சந்திப்பும் யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. யாழ்ப்பாணத்தில் நிகழவிருக்கும் சர்வ சமயக் காங்கிரஸ் மூலம் தேசிய ஸ்தானத்தையும், சர்வசமய இன ஒற்றுமையையும் நிலை நாட்டலாம். வடபகுதியிலுள்ள பாராளுமன்ற அங்கத்தவர்களும செனட்டர்களும் மற்றும் உள்ளூர் ஆட்சி மன்றங்களும, மாநகரசபைகளும் யாழ்ப்பாண பொது மக்களும் இந்த நல்நோக்கிற்கு தங்கள் ஒத்துழைப்பை [illegible] இம் மகாநாட்டை [illegible] ன்றுக்குவார்கள் என எண்ண இடமுண்டு.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் சர்வசமயக் காங்கிரஸ் மகாநாட்டில் யாழ்ப்பாண மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு தகுந்த இடம் கொடுப்பதுடன எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி யாழ்ப்பாணம் வரும் பிரமுகர்களை வரவேற்கவும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

எஸ். சிவசுப்பிரமணியம்

கொழும்பு.

---

## புத்தாண்டு விழாவில் காரியாதிகாரிக்கு அனுதாபம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறையில் நடைபெற்ற புத்தாண்டு விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் சுமார் 5 வருட காலம் வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரியாகக் கடமையாற்றி, பின்னர் திருமலைக்காரியாதிகாரியாகக் கடமையாற்றும் போது அகால மரணமடைந்த திரு. யே. டி ஆர்னல்ட்டுக்கு இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## நாட்டிலும் நகரிலும்

வருடம்பிறந்து முதல்முதலாக வீட்டைவிட்டு வெளியே போகும்பயணம் சுமுகமாக முடியவேண்டும் என்று அங்கலாய்த்துக் கொண்டே காலையில் எழுந்து ஸ்நானம் பண்ணி, குலதெய்வத்துக்கு தேங்காய் உடைத்து, கற்பூரம் கொழுத்தி, பிரயாணம் செய்வதற்கு நல்லநாளாகப்பார்த்து, பிறந்த நாள் நட்சத்திரம் விலக்கி, அட்டமி நவமிதவிர்த்து. சித்தயோகம் மரணயோகமில்லாத ஒருபொது நாளில், அருக்கன் நிலையையும், பஞ்சபக்ஷித் தொழில்களையும் கவனமாக ஆராய்ந்து. இவையெல்லாம் பொருந்திவந்த ஒரு நல்லநேரம் இருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன் ஆனந்தம் மேலிட்டவனுய், பழைய குடைத்தடியைக் கக்கத்தில் செருகிக்கொண்டு வீட்டுவாசலைத் தாண்டிய போது, வழியனுப்ப வந்த என் சகதர்மினி பின்னுல் நின்று கொண்டே 'ஆச்சூ' என்றுள்!

ஒற்றைத் தும்மல் பிரயாணத்துக்கு விலக்கப்பட்ட சகுனமாச்சே என்று அவள் மீது ஒரு விசுவாமித்திரப் பாவையை ஏவி விட்டு சற்றுப் பொறுத்து வெளிக்கிடலாமென்று திண்ணையில் உட்கார்ந்து பஞ்சாங்கத்தைப் புரட்டியபோது தும்மற்பலனின் பிரகாரம தும்மூவோர் பிற்பக்கத்தாயின் பெரு நன்மையென்றிருப்பதைக் கண்டு பேருவகை எய்தி, ஸ்திரீகள் தும்மினுல் பெருந்தீமை என்றிருப்பதைக் கண்டு பேரிடி விழுந்தாற்போல் பதறி ஒன்றும்தோன்ருதிருக்கையில், ஆலயத்தின் மணியோசை காதில் மிதந்துவர அதைப்போல நல்ல சகுனம் வேறில்லையென்றெண்ணி இரண்டாம்முறையாகப்புறப்பட்ட போது பல்லி, 'சொட சொட' என்றது!

மறுபடியும் பஞ்சாங்கத்தின் ஒத்துழைப்பை நாடி புதிதாக அச்சிடப்பட்ட அதன் ஒற்றைகளை புரட்டியபோது திங்கட்கிழமை பகல் கிழக்கில் பல்லிசொன்னுல் பிரயாணம் என்று பதினுறு திக்கின்படியும் லாபம் என்று பத்துத் திக்கின்படியும் இருப்பதைக்கண்டு, நான் எடுத்துக்கொண்டபிரயாணமும் பணத்தையோட்டி இருந்தமையால் அகமகிழ்ந்தவனுய், தெருவில் யார் வருகிறுர்கள் என்று பார்க்கச்சென்ற இல்லக்கிழத்தி 'லைன் கிளியர்' என்று சமிக்ஞை செய்ய, மூன்ருவது முறையாக இவர் பிரயாணம் செய்யத்தொடங்கி தெருவில் கலடி எடுத்து வைத்ததும் எதிரே ஒரு மொட்டந்தலையர் பிரசன்னமானுர்!

இப்படியே ஆருடங்களையும் அருக்கன் நிலைகளையும் பார்த்துக் கொண்டிருந்தால் உலகில் எந்தக் காரியமுமே நிறைவேருது- மேனுட்டவர்கள் இதுகளையெல்லாம் பார்த்துக்கொண்டா ஒரு விஷயத்தில் பிரவேசிக்கிறுர்கள்- இப்படி சகுனுபசகுனங்களைப் பின்பற்றிக்கொண்டிருந்தால் சந்தைக்குப்போன நாட்டு வைத்தியர் ஒவ்வொரு காய்கறியிலும் ஒவ்வொருகுறைபாடு இருப்பதைக்கண்டு ஒன்றுமே வாங்காமல் வெறும்கையுடன் வீடு திரும்பிய கதையாய் முடிந்துவிடும்-என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு அக்கம்பக்கம் பாராமல் நேர விரைந்துசென்று பஸ்ஸில் ஏறினேன்.

எவரைப் பார்ப்பதற்கென்று பிரயாணம் செய்கிறேனே அந்த பெரியவரிடமன்றி வேறெவரிடமும் கை நீட்டி காசு வாங்கப்படாதென்று மிகவும் கவனமாயி

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உலகை தவருனமுறையில் செலுத்தவோ பாரதத்தை நிர்ப்பந்திக்கவோ முடியாது"

## டாஷ்கண்ட் உடன்பாட்டை மீறுவதாய் பாகிஸ்தான்மீது புகார்

### அயூப்பேச்சுபற்றிவெளிமந்திரி சுவர்ண்சிங்கண்டனம்

ஹைதராபாத். ஏப்ரல்17

"சர்வதேச சமூகத்தை தவருன வழியில் செலுத்தலாம் என்ருே, பாரதத்தை நிர்ப்பந்திக்கலாம் என்ருே பாகிஸ்தான் கருதுனுல் அது தவருகவே முடியும்" என இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண்சிங் இங்கு எச்சரித்தார்.

'பாகிஸ்தான் தலைவர்கள் தங்கள் பகை மனப்பான்மையினுலும், பிடிவாதப் போக்கினுலும் டாஷ்கண்ட் ஒப்பந்த கடமைகளையும், பொறுப்புக்களையும் கைவிட்டுவிடுகிறுர்கள்' என அவர் கூறினுர்,

'பாரதம் தன் பொறுப்பைத் தொடர்ந்து நிறைவேற்றியது. பாகிஸ்தானும் அப்படியே செய்யவேண்டுமென விரும்பியது. ஆனுல் கடந்த 6 வாரங்களாக பாகிஸ்தான் வேண்டுமென்றே இந்த ஒப்பந்தத்தை அசட்டைசெய்து, பகைப்பிரசாரத்திலீடுபட்டு வருகிறது' என்ருர் சுவர்ண்சிங்.

'ராவல்பிண்டியில் மந்திரிகள் பேச்சு பயனற்றுப் போனதற்கு பாகிஸ்தானின் போக்கே காரணம். கடந்த ஆகஸ்ட் 5-ந்திகதி நிலைக்கு இருபகுதித் துருப்புக்களும் விலக்கப்பட்டுவிட்டன. ஒரு சிறு பகுதியிலுள்ள நிலை பற்றித் தகராறு எழுந்தது. ஆனுல் இதைத்தீர்க்க முயலாமல் ஜனுதிபதி அயூப்பும், இதரதலைவர்களும் அதை பிரசார போக்குக்கு கடைப்பிடித்தவிட்டார்கள். எனினும் இரு பகுதிதளபதிகளுக்குமிடையே இப்விஷயத்தில் உடன்பாடு ஏறபட்டு பிரச்னை தீர்ந்து விட்டது' என்றும் அவர் கூறினுர்

பாகிஸ்தான் ஆத்திரமூட்டினுலும் இந்தியா தொடர்ந்து டாஷ்கண்ட் உடன்பாட்டை பற்றிநிற்கும் என்றும், இதன் மூலமே கெடுபிடிகளுக்கு யார் பொறுப்பாளி என்பது உலகத்துக்குத்தெரியவரும் என்றும் வெளி மந்திரி கூறினுர்,

காஷ்மீர் முதன் மந்திரி திரு. ஸாதிக் கூடடத்தில் பேசியபோது, டாஷ்கண்ட் ஒப்பந்தத்தை இந்தியா பற்றி நிற்கும்என்றும், பாகிஸ்தான் அதை மீறினுல் விளைவுகளுக்கு அந்த நாடே பொறுப்பு என்றும் குறிப்பிட்டார்.

---

## இலங்கை வீரர்

லண்டன், ஏப். 17

இலங்கைகுத்துச் சண்டை வீரரான ஸ்ரீயோப்வான்கைலன்பர்க் இங்குள்ள ருேயல் அல்பர்ட் ஹால் மண்டபத்தில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் அடிபட்டதன் காரணமாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

லண்டன் அமைச்சூர் குத்துச்சண்டைசாம்பியன்செமிபைனல்ஸ் போட்டிகளில் 21 வயதுடைய அவர் தோற்கடிக்கப்பட்டார்.

---

பிரபல ஓவியர்

## நந்தலால்போஸ் காலமானுர்

சாந்தினிகேதன், ஏப்.17

பாரதத்தில் நவீன சித்திரக்கலையின் தந்தைஎனக் கருதப்படும் ஸ்ரீ நந்தலால் போஸ், தன் 83-வது வயதில் காலமானுர் பல ஆண்டுகளாக அவர் நோயுற்றிருந்தார்.

பிரபல ஓவியரான போஸ், ரவீந்திரநாத்தாகூரின் நண்பர். சாந்திநிகேதனில் உள்ள அவரது இல்லத்தில் மரணம் இடம் பெற்றது.

பாரத ஓவியக்கலையின் மிகப்பிரபலமான துறையில் அவர் சிறப்புபெற்றிருந்தார். பிரபல ஓவியர்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய நந்தலால்போஸ், சாந்திநிகேதனில் கலாபவன் டைரக்டராகவும் இருந்தார் விஸ்வபாரதி, காசி, கல்கத்தா ஆகிய பல்கலைக்கழகங்கள் அவருக்கு டாக்டர் பட்டங்களை வழங்கியுள்ளன. ஜனுதிபதி. பிரதம மந்திரி ஆகியோர் போஸ் மரணம்குறித்து நேற்று அனுதாபச் செய்திகள் அனுப்பியுள்ளார்கள்.

---

## நாஸர் கொலை-சதி வழக்கு

கெய்ரோ, ஏப்ரல் 17

ஜனுதிபதி நாஸரைக் கொலை செய்ய முயன்றதான வழக்கில் முஸ்லீம் சகோதரத்வ ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒருவர், தாம் அலெக்ஸாண்டிரியாவில் ஜனுதிபதியைக் கொலை செய்ய இருந்ததாய் நீதிமன்றத்தில் கூறினுர்.

மற்ருேர் எதிரி வாக்குமூலமளிக்கையில் மற்றும் 4 தலைவர்களைக் கொல்லும் பொறுப்பும்தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்ருர்.

---

## சீனத்தலைவர்கள் ரங்கூன் புறப்பாடு

டாக்கா, ஏப். 17

சீன ஜனுதிபதி லியூஷாசியும், வெளிமந்திரி மார்ஷல் சென்யீயும் தங்கள் கிழக்கு பாகிஸ்தான் விஜயத்தை முடித்துக் கொண்டுவிட்டு, இன்று ரங்கூன் புறப்பட்டார்கள்.

நேற்று அதிபர் அயூபும் சீனத்தலைவரும் 2 மணி நேரம் உலகநிலைமை பற்றியும், சர்வதேச பிரச்னைகள் பற்றியும் ஆராய்ந்தார்கள்.

---

## கென்யா மந்திரிகள் ராஜினுமா

நைரோபி, ஏப். 17

கென்யா மந்திரிசபையிலிருந்து மேலும் 2 மந்திரிகள் ராஜினுமாசெய்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

## இன்று நடைபெறும் ஹொலிவுட் விருது வைபவம்

### 7 வெளிநாட்டு நடிகர்கள் 'ஒஸ்கார்' விருது பெறுவர்

ஹொலிவுட், ஏப். 17

நாளை இங்கு நடைபெறவிருக்கும் ஒஸ்கார்பரிசளிப்பு வைபவத்தில் அமெரிக்கர்கள் அல்லாதவர்கள் உயர் விருதுகளைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது,

சிறந்த நடிகர், நடிகை என்றவகையில் பொறுக்கப்பட்டிருக்கும் 10 பேரில் 7 பேர் வெளிநாட்டவர்கள். அவர்களில் பெரும்பாலோர் பிரிட்டிஷார்.

ரிச்சார்ட் பேர்ட்டன், லாரன்ஸ்ஒலிவர், ஜுலி அண்ட்ருேஸ், ஜுலிகிறிஸ்டி, சமந்தா எகார் ஆகியோர் அவர்கள்-

ஆனுல் அவுஸ்திரேலியாவைச்சேர்ந்த வேர்னர், தங்கத்தகட்டு விருதைப் பெறுவார் எனத்தெரிகிறது.

பிரெஞ்சு நட்சத்திரம் சைமோன் சிக்னரட் இரண்டாவது முறையாக ஒஸ்க்கார் பரிசு பெற நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது.

லீ மார்வின், ருெட்ஸ்டீனுர், எலிஸபெத்ஹார்ட்மன் ஆகிய 3 அமெரிக்க நட்சத்திரங்கள்தான் இவ்வாண்டு ஒஸ்க்கார் பரிசுபெறச் சந்தர்ப்பம் பெற்றிருக்கிறுர்கள்.

சிறந்த அன்னிய மொழிப் படத்துக்கான விருதை கிரகரி பெக் வழங்குவார். கிரேக்க, சுவீடிஷ். ஜப்பானிய, இத்தாலிய, செக் மொழிப் படங்கள் இதற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

## "சீன ஆக்கிரமிப்புக்கு அமெரிக்கா இடமளியாது

### போர்மோஸாவை தொடர்ந்து பாதுகாப்போம்"

— ரஸ்க்

வாஷிங்டன், ஏப். 17

சீனுவின் எந்த ஆக்கிரமிப்பையும் தடுக்க அமெரிக்கா உறுதியுடன் இருப்பதாக வெளிநாட்டு மந்திரி ரஸ்க், காங்கிரஸ் உபகமிட்டியில் பேசும்போது கூறினுர்.

சீனு ஐ. நா. வில் பிரவேசிப்பதை அமெரிக்கா தொடர்ந்து எதிர்க்கும் எனக் கூறிய ரஸ்க், சீனு இப்போதைய போக்கை தொடர்ந்து கடைப்பிடிக்கும் வரை அமெரிக்காவின் கொள்கை அப்படியே இருக்கும் என்ருர்.

சீனுவுடன் நல்லுறவுடன் இருக்கவேண்டும் என்பதே அமெரிக்காவின் கொள்கை என்ருர் ரஸ்க். ஆனுல் சீனு அதன் ஆக்கிரமிப்பு போக்கை மாற்றிக்கொள்ளாதவரை இது சாத்தியமில்லையென்றும் அவர் கூறினுர்.

ஆக்கிரமிப்பினுல் சீனுவுக்கு எவ்விதப் பலனும் இல்லை என்பதை அமெரிக்கா நிரூபித்துக்காட்டும் என்றும் திரு. ரஸ்க் குறிப்பிட்டார்.

சீனுவின் பிரதான பூமியைத் தாக்குவது அமெரிக்காவின் கொள்கை அல்ல என்றும், ஆனுல் போர்மோஸாவை அது பாதுகாத்துவரும் என்றும் அவர் தொடர்ந்து கூறினுர்.

---

## வடக்கே தமிழ் வளர வழி

புதுடில்லி, ஏப். 17

வடஇந்தியர்கள் தமிழை எளிதாக கற்க வகைசெய்யும் புத்தகம் ஒன்றை, அதை எழுதிய சௌமிய நாராயணன் நேற்று ஜனுதிபதியிடம் கையளித்தார். 600 சொற்களையும், 200 வாக்கியங்களையும் கொண்ட இந்தப் புத்தகம் குறைந்த வழியில் தமிழ்மொழியை கற்கும் விதத்தில் ஆக்கப்பட்டிருக்கிறது. இப் புத்தகம் குறித்து திரு காமராஜ், திரு. பக்தவத்சலம் ஆகியோர் பாராட்டு தெரிவித்திருக்கிறுர்கள்.

## ரஹ்மான் ஆரிப் ஈராக் ஜனுதிபதி

பாக்தாத், ஏப். 17

ஈராக்கின் புதிய ஜனுதிபதியாக மேஜர் ஜெனரல் அப்துல் ரஹ்மான் ஆரிப் தெரிவுசெய்யப்பட்டார்.

காலஞ்சென்ற ஜனுதிபதியின் சகோதரர் அவர். முன்பு தற்காலிக பிரதம ராணுவத் தளபதியாக இருந்தவர்.

மந்திரி சபையும் தேசிய பாதுகாப்பு சபையும் ஏகமனதாக ரஹ்மான் ஆரியைத் தெரிவுசெய்தது.

அதே சமயம், காலஞ்சென்ற ஜனுதிபதியின் சடலம் நேற்று பழைய மசூதி ஒன்றில் குடும்பமயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

பீரங்கிவண்டியில் சென்ற பிரேத ஊர்வலத்தை ஆயிரக் கணக்கான மக்கள் கண்ணுற்றனர்.

---

## தென் வியட்னும்

சைகோன், ஏப். 17

தென்வியட்னுமில் தேர்தல் நடைபெறும் வரை பிரதமர்கீ தொடர்ந்துபதவியில் இருக்க உரிமை உண்டுஎன, தேர்தல் ஆயத்த காங்கிரசின் தலைவர் கூறினுர்.

அதேசமயம் டானுல்ரல் அரசாங்கவிரோத ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அரசாங்கம் மேலும் பல நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனக் கருதப்படுகிறது.

---

## 'மனுலா' எண்ணெய்க் கப்பல் செல்லுமிடம் தெரியவில்லை

### ரொடீஷியாபற்றிலண்டனில் தீவிர ஆலோசனை

டர்பன், ஏப். 17

ரொடீஷியாவுக்கு எண்ணெயுடன் டர்பனில் நிறுத்தப்பட்டிருந்த, மனுலா என்ற கப்பல், துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டது.

கரையிலிருந்து 2 மைல் தூரத்திற்கப்பால்அதுநிறுத்தப்பட்டிருப்பதாய் இப்போது கூறப்பட்டது. ஆனுல் இது இனி எங்கு செல்லவிருக்கிறது என்பது இன்னும் தெரியவில்லை.

ஏற்கனவே தென்னுபிரிக்கா, இக்கப்பலிலிருந்து எண்ணெயைஇறக்கமறுத்துவிட்டது.

லண்டனில் ரொடீஷியா சம்பந்தமான ஆலோசனைகள் தீவிரமாகியிருக்கின்றன. அங்குள்ள ரொடீஷிய ஹைகமிஷனர் பிரதமர் வில்சனைச் சந்தித்துப் பேசினுர்.

ரொடீஷியாவிலிருந்த பிரிட்டிஷ் தூதர் வெளிநாட்டுமந்திரி ஸ்டுவர்ட்டுடன் பேசினுர்.

## மதுரையில் தென்கிழக்காசிய ஆராய்ச்சிப் பிரிவு ஏற்படும்

### உலகத்தமிழ்மகா நாட்டில் பக்தவத்சலம் உரை

கோலாலம்பூர், ஏப். 17

மதுரைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் தென்கிழக்காசிய ஆராய்ச்சிப் பிரிவொன்றை குறிப்பாக மலாய் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நிறுவ தமிழ்நாடு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது என முதல்மந்திரி திரு. பக்தவத்சலம், முதலாவது சர்வதேச தமிழாராய்ச்சி மகாநாட்டின் ஆரம்பக் கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

மகாநாட்டை மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் திறந்துவைத்தார்.

47 தமிழறிஞர்களின் தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்கி வந்திருக்கும் திரு. பக்தவத்சலம் மேலும் பேசுகையில், இந்தியாவுக்கும் மலேஸியாவுக்குமுள்ள ஒற்றுமைத்தன்மைகளைக் குறிப்பிட்டார். இரு நாடுகளும் பல மொழிகளையும், பல மதங்களையும் கொண்ட நாடுகள். இரண்டும்மொழி, மதம் ஆகியவற்றில் சகிப்புத்தன்மை கொண்ட நாடுகள் என்றும் அவர் கூறினுர். (பி.டி.ஐ.)டது.

## இந்தியாவில் 100 மைல் வேக ரெயில்

புதுடில்லி, ஏப். 17

முக்கிய பாதைகளில் மணிக்கு 80 முதல் 100 மைல் வேகத்தில் ரயில்களை விடும் ஏற்பாடு விரைவில் மேற்கொள்ளப்படும் என ரயில்வே மந்திரி இங்கு கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைக்கு வேலை

கடைசியாக வெளியான மூளைக்கு வேலைப்பகுதியில் கலந்துகொண்டவர்களில் அதிகமானவர்கள் இரண்டு கேள்விகளுக்கும் சரியாக விடை எழுதியிருந்தனர். அனைவருக்கும் எமது விசேஷ பாராட்டுதல்கள். யார், யார் சரியான விடைகளை எழுதியிருந்தனர் என்று அறிந்து கொள்வதற்கு முன்னர் சரியான விடைகளைக் கவனிப்போம்.

முதலாவது கேள்வியின் விடை: சர்தார் வல்லபாய் பட்டேல். இரண்டாவது கேள்வியின் விடை; டாக் ஹமர் ஷீல்ட். பின்வருபவர் இரண்டு கேள்விகளுக்கும் சரியாக விடை எழுதியிருந்தனர்

பி. எஸ். சிறில், யாழ்ப்பாணம்; ஆர் பாலேந்திரன் புற்றளை; எஸ். ஏ. நாகூர்ப்பிச்சை, வவுனியா; க இராதாகிருஷ்ணன், வதிரி; வை. மகாலிங்கம், அனலைதீவு வடக்கு; ச. சுந்தரமூர்த்தி, தம்பசிட்டி; வி. ராஜேஸ்வரி; பொ. துரைராசா, எழுதுமட்டுவாள்; வேலுப்பிள்ளை கமலாதேவி, உசன்; வே. விநாயகமூர்த்தி, எழுதுமட்டுவாள் தெற்கு; த. புஷ்பராணி, முகமாலை; எஸ் சரோஜா, இடைக்காடு; சி. ஜி குமாரசுவாமி, எழுதுமட்டுவாள்; க. நாகேந்திரன், அரியாலை; வி மகேஸ்வரி, யாழ்ப்பாணம்; மனோகரன் அலெக்சாண்டர், கரம்பன்; ச. செம்பொற்சோதீஸ்வரன், கோப்பாய் வடக்கு; யா. மேரியசிந்தா, வட்டுக்கச்சி; ஞா. குணசிங்கம், வசாவிளான் கிழக்கு; மு. செபஸ்தியாம்பிள்ளை, பாஷையூர்; சி இவஞானராசா, அளவெட்டி; பீ. யோகானந்தம் யாழ்ப்பாணம்; செ. கணேசஐயர், அனலைதீவு; குணநாயகி சண்முகம், உரும்பராய் கிழக்கு; கு. இராஜகோபால், நல்லூர்; செ. செல்வராணி முரசுமோட்டை, பரந்தன்; ஆ ஏரம்பமூர்த்தி, புலோலி கிழக்கு; வை. நடராசா, யாழ்ப்பாணம்; தி. ஜெயகுமாரன், கோப்பாய் தெற்கு; மு. கோ தில்லைநாயகம், அரியாலை மேற்கு; தி செபஸ்தியான், பாஷையூர்! ஐயன்ன முருகையா, சூராவத்தை; இ. குபேரச்சந்திரன், புலோலி கிழக்கு: சி சுதந்திரராஜா, தாவடி; உ. தர்மலிங்கம், யாழ்ப்பாணம்; கு. நடராஜா, சித்தங்கேணி; கே எஸ். ஞானராசா மருதங்கேணி; க. விக்னேஸ்வரன், உரும்பராய் மேற்கு, கு. பற்குணராசா, சாவகச்சேரி; சி. கணேசதாசன், யாழ்ப்பாணம்: செ. மாசிலாமணி, மட்டுவில்; ஏ. பயஸ், பாஷையூர்; மனோகரன் வாமதேவன், கந்தர் மடம்.

## கேள்வி மண்டலம்

முதலாவது கேள்வி: இலங்கையில் முதன் முதலில் ''ராக்கெட்'' தயாரித்த பாடசாலையின் பெயர் எது? பாடசாலையின் பெயர் மட்டும் குறிப்பிடவும்.

இரண்டாவது கேள்வி: (அ) ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் கடைசியாக எங்கு எப்பொழுது நடைபெற்றது? (ஆ) அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் எங்கு எப்பொழுது நடைபெறும்?

கேள்விகளுக்குரிய விடைகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக தபாலட்டையில் மாணவர் மலர், 'ஈழநாடு' த. பெ: 49, யாழ்ப்பாணம். என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

---சாந்தா

# விவாத மேடை இல: 1

நாளுகாலி உத்தியோகத்தைப் பெறுவதையே தமது இலட்சியமாகக் கொண்டு வாழும் இக்கால வாலிபரும் வனிதையரும் இனித் தமது இலட்சியத்தை மாற்றிக் கொள்ளவேண்டும்.

நாட்டின் கைத்தொழிலையும் விவசாயத்தையும் முன்னேற்றி எமது தாயகத்தின் தேவை அனைத்தும் பூர்த்தியாக்குவதற்கு முதலில் தேவை அறிவு. பணம், ஒற்றுமை, அரசியலாரின் ஆதரவு. இவை யாவும் முதலில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையாகும். அறிவிருந்தால் தான் எத்தொழிலையும் துணிந்து தொடங்க முடியும் எனவே எமது நாட்டின் தொழில் கல்வி விருத்தியடைய வேண்டும். தொழில் தொடங்குவதற்கு தேவை பணமாகும். நமது நாடு முன்னேற வேண்டுமாயின் நமது நாட்டுச் செல்வந்தர்கள் உதவி செய்யவேண்டும். அந்நிய நாடுகளிடம் இருந்து பெறும் பொருட்களைப் மூலப் பொருட்களாகவும் பணமாகவும் பெற்று எமது நாட்டில் முதலிட்டு தொழிலை விருத்தி செய்து அந்நியச் செலவுகளை ஒப்படைத்தால் தான் எமது நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

தில்லையம்பலம்
இராஜேஸ்வரி,
திருநெல்வேலி.

ஃ ஃ ஃ

வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவும், பொருளாதாரம், பண வருவாய் முதலியன பெருகவும், மாணவர்கள் தங்கள் வருங்காலத்தை வளம் படுத்தவும் ஒவ்வொருவரும் தொழிற் கல்வியைக் கற்க முன்வர வேண்டும். கல்விகற்று முடிந்ததும், பலவிதமான கைத்தொழில்களையும், கோழிப் பண்ணை, ஆடு, மாட்டுப் பண்ணை, விவசாயம் போன்றவற்றை ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் உயரும், வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும், பண வருவாய் பெருகும்.

-கந்த. ரவிச்சந்திரன்,
சாவகச்சேரி.


ஃ ஃ ஃ

எத்தனை எத்தனையோ தொழில்கள் இருக்க 'வேலையில்லாத் திண்டாட்டம்' என்று கூச்சலிடுகின்றனர் படித்த வாலிபர்கள். அவர்கள் தாம் படித்த போது அந்த இலட்சிய நோக்கம் கொண்டதே காரணம். படிக்கும் போதே பல்வேறு தொழில்களையும்கற்று அதன் மகிமையை அறிதல் வேண்டும். தொழில் மகத்துவம் இல்லை என்று எண்ணுது அவர்கள் அத்தொழிலையும் கற்க பாடசாலையிலேயே தொழிற் கல்வி புகட்ட வேண்டும். களை பிடுங்கும் இயக்கம், பணத்திலே மிதந்த பள்ளி சிறுர்களைக் கூட களை பிடுங்கும் இயக்கத்தில் ஓர் அங்கத்தவனுக்கியது!

இப்படியாக ஒவ்வொரு தொழில்களையும் வருங்கால நாட்டின் பிரஜைகளாகிய இன்றைய மாணவ சமுதாயம் செய்ய முயற்சிக்க வேண்டும். வயல்களை எல்லாம் நெல் கொழிக்கும் பொன் நிலமாக்கலாம். வீதியிலே வீண்காலம் கடத்தும் நேரத்தில் நாட்டின் நலனை...

(5-ம் பக்கம் பார்க்க)

# சுழலும் உலகிலே சில சுவையான தகவல்கள்




கோழி முட்டை என்றால் பலருக்கும் விருப்பம்தான், ''அப்படியே பத்து முட்டைகளைச் சாப்பிட்டுவிடுவேன்'' என்று பந்தயம்கட்டுபவர்கள் நம்மிடையேயும் இருக்கிறார்கள்: ஆனால் பெல்ஜியத்தில் இதற்கென்றே என்னவோ ஒருவர்பிறந்துஇருக்கின்றார். இவர் அரை அவியல் முட்டைகளைச் சாப்பிடுவதில் இம்பொழுது உலக சாதனையைநிலைநாட்டியிருக்கின்றார் இவர் ஒரேதடவையில் சாப்பிட்ட முட்டைகள் 44; இதற்குப் பிடித்தநேரம்: 30 நிமிடங்கள்!

ஃ ஃ ஃ

அமெரிக்காவில் இப்பொழுது பரபரப்பான செய்தி; பறக்கும் தட்டுகள் பற்றியதுதான். இரவு நேரத்தில் வானத்தில் ஏதும் ஊர்கிறதா என்று அமெரிக்கர்கள் பலர் அடிக்கடி வெளியே வந்து பார்ப்பதாக செய்திகள் கூறுகின்றன. கிரகவாசிகளின் செயல்கள் தங்களுக்குப் பெரும் சவாலாகவிருப்பதாக விஞ்ஞானிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

திருவனந்தபுரம் அரசாங்க உயர் நிலைப் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் முப்பதாண்டு சேவைக்குப் பின்னர் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அன்றையதினம் அவருக்கு பாராட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது. சக ஊழியர்களும் மாணவர்களும் ஆசிரியரின் சேவையைப் பாராட்டி புகழ்ந்து பேசினார்கள். கதிரையிலிருந்து கொண்டு பாராட்டுரைகளைக் 'கவனித்துக்கொண்டிருந்த அந்த ஆசிரியர்... திடீரென மயங்கிவிழுந்தார்! அதிலேயே நிரந்தரமான ஓய்வுபெற்று விட்டார்.

— மகான்


நல்ல காலம் வருகுது!
நல்ல காலம் வருகுது!




உங்கள் வீடு தேடிவரும்
சன்லைட் மங்கையிடம்
10/- ரூபாய்
பரிசு
பெறுங்கள்!

இலகுவாக நீங்கள் 10/- ரூபாய் பரிசு பெற இதோ ஒரு சந்தர்ப்பம்!

மேலே படத்தில் காணப்படுபவர் போன்ற ஒரு சன்லைட் மங்கை. ஏப்ரல் 28ம் தேதிக்கும் 30ம் தேதிக்கும் இடையில் நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு விஜயம் செய்வார். அவர் விஜயம் செய்யும் வீடு தோறும், உங்கள் தகுதியை ஆராய்ந்து பத்து ரூபாய் வீதம் பரிசுகளை வழங்குவார்.

பத்து ரூபாய் பரிசுக்குத் தகுதி பெற நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவுதான்:

உங்கள் வீட்டில் இரண்டு கட்டி சன்லைட் வைத்திருங்கள். ஒன்று பாவனையிலும் ஒன்று புதிதாகவும் இருக்க வேண்டும். இரண்டுகட்டிகளையும் சன்லைட் மங்கையிடம் காட்டுங்கள். "நீங்கள் ஏன் சன்லைட் உபயோகிக்கிறீர்கள்?" என்று அவர் கேட்பார்.

"சன்லைட் தருவது மேலும் பிரகாச சலவை; அத்துடன் சன்லைட்டினுல் ஒரு உடையைச் சலவை செய்யும் செலவு, ஒரு சதத்திலும் குறைவு" என்று சரியாகப் பதில் கூறுங்கள். இந்தச்சரியான விடையைக் கூறினுல் உடனே அவர் உங்களுக்கு10/- ரூபாய் பரிசு கொடுப்பார்.

இந்தப் பரிசுத் திட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் செல்லுபடியாகும்.

உங்கள் சலவை வேலைகள் அனைத்தையும், வீட்டில் சன்லைட்டினுல் செய்து, சுத்தமான பிரகாச மான ஆடைகளை அணியுங்கள். கொடுக்கும் பணத்துக்குத் தகுந்த சிறந்த பெறுமதி தருவது சன்லைட்.

சன்லைட் மேலும்
பிரகாசமாகச் சலவை
செய்கிறது-
வேறெந்த சோப்பும்
நிகர் நிற்க முடியாத
பிரகாசம்.




JWT/S/4x56 (P)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

சுன்னுகம்
ஸ்ருடியோ
பிறின்ஸெஸ்
13வது ஆண்டு
நிறைவு விழாவை
முன்னிட்டு
10-4-66 — 30-4-66
அரைச் சலார்
1714



## தேயிலை விற்பனை

490 3/8 இருத்தல் (3923 இரண்டு அவுன்ஸ் பைக்கட்டுகள்) தேயிலை விற்பனைக்கு உண்டு. கீழ்க்காணும் விலாசத்துக்கு 20-4-66 மாலை 4 மணிக்கு முன்னர் இருத்தல் ஒன்று வாங்கும் விலையைக் குறித்து விண்ணப்பிக்கவும்.

பார்வையிட விரும்புவோர் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

இங்ஙனம்,
முதலியார்
வை. மகேசன் ஜே. பி.
வ.ப.வி. உ. க. சாமாசம்,
111, பிரதானவீதி,
138 யாழ்ப்பாணம்.


## ‘விரைவில் பிரச்னை தீரும்’

கொட்டாவா, ஞாயிறு

“நாங்கள் தற்பொழுது வெளிநாட்டு உதவியுடன் வாழ்ந்துகொண்டு வருகின்றேம். இந்தச் சூழ்நிலை மாற வேண்டும்” என்று சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன கொட்டாவா வித்தியாலயத்தில் சிங்கள புதுவருடப் பிறப்பையொட்டி நடைபெற்ற விழாவில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

தொடர்ந்து திரு. ஜெயவர்த்தன பேசுகையில் குறிப்பிட்டதாவது: இந்த நாட்டில் விவசாயம் செய்யக்கூடிய நிலப்பரப்பு அத்தனையும் கமத்தொழிலுக்காக உபயோகப்படுத்தப்படல் வேண்டும். தேசிய அரசாங்கம் விரைவில் புதிய திட்டங்கள் அமைத்து பிரச்னைகளை தீர்த்துவைக்கும்.

# “கலாச்சாரப் பகுதியுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம்”

—செனட்டர் நடராசா

மாவிட்டபுரம், சனி

‘யாழ்ப்பாண மக்களுக்கு கலாசாரப் பல்கலைக்கழகம் வேண்டியதில்லையென நாம் ஒருபோதும்கூறவில்லை. கலாசாரமும் இடம்பெறக்கூடிய பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகமே தமிழரசுக்கட்சியின் இலட்சியமாகும். இதனைப் புரிந்துகொள்ள முடியாத சிலர் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்திவருகின்றனர்’ என்று செனட்டர் சு. நடராசா வட அளவைசனசமூக நிலைய ஆண்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

செனட்டர் நடராசா மேலும் குறிப்பிட்டதாவது:

பெற்றேர் தமது பிள்ளைகளுக்குக்கொடுக்கும் கல்வி எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்றதாக இருக்கும்படிபார்த்துக்கொள்ளவேண்டும். வெறும் புத்தகப் படிப்பினை எதிர்காலத்தில் எல்லாச்சிறுவர்களும் பெறமுடியாது. கைத்தொழில்கமத்தொழில் என்பனவற்றில் மக்கள் சிரத்தைகொள்ளவேண்டும்.

வலி-வடக்கு காரியாதிகாரி திரு.டி. முருகேசபிள்ளை பேசியதாவது:

சைவத்தை வளர்ப்பதும் தமிழ்க்கலாசாரத்தை அபிவிருத்தி செய்வதும் பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் காணவும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். கலாச்சாரத்துறையில் மேற்குத்தேசமுறையில் எங்கள் மத்தியில் நடமாடுவதால் பஞ்சமாபாதகங்கள் மலிந்துவிட்டன. இதனை எமதுசமூகத்திலிருந்து அகற்றவேண்டும். பொருளாதாரத்துறையில் கோழிவளர்ப்பு, கால்நடை அபிவிருத்தி, வெங்காயக்கூடை பின்னுதல், நெசவு, பனுட்டு, பனங்கட்டி முதலான பொருட்களை உற்பத்திசெய்துகூட்டுறவு அடிப்படையில் விற்பனையாக்கி அனைவரும்பலன்பெற உதவவேண்டும்.

திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில், இப்பகுதிக்கு மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படியும், கலாச்சாரத்துறைகளில் இச்சனசமூகநிலையத்தின்சேவை பாராட்டிற்குரியதென்றும் சொன்னர்.

## விவாத மேடை . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் தன் வருங்கால வாழ்க்கை நோக்கியும் பயன்தரும்கைத்தொழிலில், கமத்தொழிலில் ஈடுபடவேண்டும். படித்துக் கொண்டிருக்கும் போது ஒருவன் தன் வாழ்நாள் நடத்தும் வகை உணரவேண்டும். ஆனல் நாகரீகத் தொழில் புரிவோம் என்ருல் அது ஒரு “நாய் அலைச்சலாகும்.”

[விவாத மேடை இலக்கம் ஒன்று அடுத்த வாரத்துடன் பூர்த்தி பெறுகிறது. அடுத்த மாணவர் மலரிலேயே விவாத மேடை இலக்கம் இரண்டுக்குரிய விஷயதானம் இடம் பெறும். விவாத மேடை இல: 1-ன் ‘தீர்ப்பு’ அடுத்த மாணவர் மலரில் வெளியிடப்படும்.]

## தமிழிசை விழா
### இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், திங்

அண்ணமலை இசைத்தமிழ் மன்றத்தின் (யாழ்ப்பாணம்) ஏழாவது தமிழிசைவிழா இன்று மாலை ஆரம்பமாகின்றது தமிழிசைவிழா திருநெல்வேலி முத்துமாரியம்மன் சிவன்கோவில் திருவீதி அரங்கில் தொடர்ந்து 3 நாட்களுக்கு நடைபெறும்.

தமிழிசைவிழாவின் முக்கிய அம்சமாக 3 நாட்களிலும் 3 விசேஷ சங்கீத நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இன்று சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை, சங்கீதபூஷணம் ப. முத்துக்குமாரசாமி ஆகியோரின் திருப்புகழ் கச்சேரியும், நாளை வித்துவான்கள் எஸ். இராசையா, வே. நடேசன், சி. விநாசித்தம்பி ஆகியோரின் பண்ணிசைக் கச்சேரியும் புதன்கிழமை சங்கீதபூஷணம் ஆ. நமசிவாயம், சங்கீதபூஷணம் யோ. சந்திரசேகரம் ஆகியோரின் தீந்தமிழிசையும் திருவாசகத்தேனும் இடம்பெறும். இறுதித் தினத்தன்று செல்வன் ஆனந்த இராசமாணிக்கத்தின் சிவதாண்டவம் இடம் பெறும்.


## தரமான மொறட்டுவை வீட்டுத் தளவாடங்கள்

தரமான தளவாடங்களுக்கும், நியாயமான விலைக்கும் எம். எஸ். பெர்னண்டோ அன் கொம்பனி பிரசித்திபெற்றது.

இந்தப்பருவத்தில் விற்பனையாகும் பொருட்கள் ஒன்றுதான் கீழே காட்டப்பட்டுள்ளது

முதல்தர பர்மா தேக்கிலான ஸ்பிரிங் கட்டில் ரூபா 245-00.

இரண்டாந்தர பர்மா தேக்கிலான செட்டின் ஸ்பிரிங்கட்டில் ரூபா 175-00.

(முதல்தர ஸ்பிரிங் இணைக்கப்பட்டது)



விருந்தை முதல் சமையலறை வரைக்கும் உங்கள் சகல வீட்டுத் தேவைக்குமான தளவாடங்களும் எங்களிடம்உண்டு. தரம், வேலைப்பாடு, விலை ஆகியவற்றில் உத்தரவாதம்.

எம். எஸ். பெர்னண்டோ அன் கம்பெனி
110, காலி வீதி, மொறட்டுவை.

கிளைகள்:- இல. 4, இன்டிபெத்த, மொறட்டுவை.
இல. 32, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



## வரி விளம்பரம்

### தேவை

பெற்றேல் வினியோக நிலையங்களுக்கு முகாமையாளர்கள் (மனேச்சர்) தேவை. விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் ரூ. 2000/- விளம்பர இலக்கம் 222 ‘ஈழநாடு’மேற்பார்தது என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 222

கலேவெல முத்துமாரி அம்மன் கோவில் பூசை செய்ய குருபட்டம் பெற்ற ஐயர் ஒருவர் தேவை, மூன்றுகாலப் பூசை செய்ய ரூபா 125/- மாதச் சம்பளம் கொடுக்கலாம். அத்துடன் அருச்சனைப் பணம் அவருக்குரியதே. குடும்பமாகவரின் வீட்டு (கோவில்) வசதியளிக்கப்படும். விரும்பியவர்கள் 30-4-66 க்குமுன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் யாவும் முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலனச் சபைக் காரியதரிசிக்கு அனுப்பவேண்டும், விண்ணப்பங்களை முத்துமாரி அம்மன் பரிபாலனச் சபைக் காரியதரிசி, 214 டம்புல்லை ரேட்டு, கலேவெல என்ற விலாசத்துக்கு அனுப்பவும். 236

அப்பளம் போடுவதற்கு அனுபவம் உள்ள தொழிலாளர்கள் தேவை. நேரில் வந்து பேசவும். ஆ.ச. ச. சங்கரப்பிள்ளை அன் சகோதரர்கள் No 166 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 237

### விற்பனைக்கு

22 ஸ்ரீ 3000 இலக்கத் தொடர்புடைய பேபி பென்ஸ் அனமாக்ஸ் 2 தொன் முழுதும் பழுது பார்க்கப்பட்டது. 1 கலன் டீசலுக்கு 30 மைல் ஓடும். உடனடியாக விற்பனைக்குண்டு. கல்ரெக்ஸ் பெற்ரேல் செட், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 232

தற்சமயம் கொழும்புஸ்ருடியோ இருக்கும் இல. 12 மணிக்கூண்டு வீதி யாழ்ப்பாணத்திலுள்ள இரட்டைமாடிக் கட்டிடம் விற்பனைக்குண்டு. திருமதி வி. சுப்பிரமணியம், செல்வஸ்தான், கொட்டடி, யாழ்ப்பாணத்திற்கு விண்ணப்பிக்கவும்.

பி. கு. “கொழும்பு ஸ்ருடியோ” விற்பனைக்கில்லை என்றும் அறிவிக்கப்படுகின்றது. 220

### கல்வி

யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத்தெரு 43-ம் இலக்கக் கட்டிடத்திலுள்ள கல்வி நிலையத்தில் எல்லாவகுப்புக்களும் தொடங்கி நடைபெறுகின்றன. புது வகுப்புக்கள் (கலை விஞ்ஞானம்) 20-4-66-ல் ஆரம்பமாகும். பாடங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் கற்பிக்கப்படும். தேவையான பாடங்களைத் தனியாகவும் வகுப்பிற் சேர்ந்துங் கற்க வசதி செய்யப்படும். வேறு பாடசாலைகளிற் கல்விகற்கும் மாணவரும் விடுதியிலே தங்கலாம். 233

விவேகானந்த கல்வி நிலையம் தெல்லிப்பழை. G.C.E. (O.L; A.L.) கலை விஞ்ஞான வகுப்புக்கள் சிங்கள வகுப்புக்கள் 15-4-66முதல் ஆரம்பமாகின்றன. சேருங்கள். 215

### வாடகைக்கு

கே. கே. எஸ். வீதியில் 504-ம் நம்பர் வீடு. (தட்டா தெரு) (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், லேடீஸ் கொலிச்சுக்கும் சமீபத்தில்) எல்லா வசதிகளுடன் வாடகைக்கு இருக்கிறது. விபரங்கட்கு: S. K. சேனுதிராசா. சேனுதிராசா நகை மாளிகை, கொக்குவில் கிழக்கு. 202

### ஞாபகார்த்தம்

பெ. வீ. கந்தையா எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு பூர்த்தியாகிறது. இறப்பு: விசுவாவசு சித்திரை கிருஷ்ண பக்ஷத்திரியோதசித் திதியன்று, என்னருமைத் தந்தையே, உங்கள் அருமை அன்புமுகம் பேருதவிகள் என்றும்மறக்க முடியாதவை. ஸ்ரீமதி கோ. மனோன்மணி, 243/3 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 226


## கார் வழக்கு; மே 7-ல் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாய் பொலிஸாரினுல் கண்டுபிடிக்கப்பட்ட காருக்கு இருவர் சொந்தம் கோரிய வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் திரு. ரி. ஜே ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் கோப்பாய் பொலிசார் கண்டுபிடித்த காருக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த எட்வார்ட் ராஜாவும், கொண்டாவிலைச் சேர்ந்தகந்தசாமியும் சொந்தம் கோரியிருந்தனர்.

எட்வார்ட்ராஜா சார்பில் பாரீஸ்டர் எம். சிவானந்தன் புறக்டர் எஸ். நடராசாவின் அனுசரணையுடன் ஆஜராஞர். கந்தசாமி சார்பில், அட்வகேட் அமிர்தலிங்கம் புறக்டர் ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

விசாரணையின்பின் நீதிபதி தீர்ப்பு வழங்குவதை மே மாதம் 7-ம் திகதி ஒத்திவைத்தார்.

வலி.மேற்கு

## சனசமூக நிலைய உபவிழா
### போட்டி முடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு சனசமூகநிலையங்களின் சமாஜ உபவிழா போட்டிகள் சித்தங்கேணி கணேசா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

போட்டிகளை மானிப்பாய் கிராமசபைத்தலைவர் திரு. சி. மார்க்கண்டு ஆரம்பித்து வைத்தார்.

சமாஜச் செயலாளர் த. துரைசிங்கம் போட்டியில் கலந்துகொண்டவர்களை பாராட்டிப் பேசினர். விழாச் செயலாளர் க. வாமதேவன் நன்றி கூறினர். போட்டியில் அனேக சனசமூக நிலையங்கள் கலந்து கொண்டன.

போட்டி முடிவுகள் வருமாறு:

### பேச்சு

மேற்பிரிவு: இ. ஈஸ்வரி, தொல்புரம் மேற்கு, கலைவாணி ச. ச. நிலையம்; க. மார்க்கண்டேயர், அராலி முருகன் ச. ச. நிலையம்; வா. ஞானசக்தி, பொன்னலை நெல்லியான் ச. ச. நிலையம்

கீழ்ப்பிரிவு: வா. கிருபாசக்தி, பொன்னலை நெல்லியான் ச. ச. நிலையம்; வீ. நாகநாதன் சுழிபுரம் வீரபத்திரர் ச. ச. நிலையம்; ந. விஷயலட்சுமி, அராலி தெற்கு கிழக்கு ச. ச. நிலையம்.

### கிராமியப் பேச்சு

மாதகல் மேற்கு ச.ச.நிலையம், பொன்னலை நெல்லியான் ச. ச. நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்
இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் சங்கீதபூஷணம் எஸ். எஸ். நடராஜனின் இசை அரங்கேற்றம் நடைபெறவிருக்கிறது. இவ்வைபவத்துக்கு யாழ். மேயர் திரு ஏ. துரையப்பா தலைமைதாங்குவார்.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம், அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைப் பேராசிரியர் திரு. எம். எம். தண்டபாணிதேசிகர் ஆகியோர் இதனையொட்டி விசேஷ ஆசிச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

REGAL—JAFFNA
NOW SHOWING!
Harry Guadine - Shirley Eaton
in
M. G. M's
RHINO!
[True-Life Film in color]

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
எங்கள் வீட்டுப்பிள்ளை

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45க்கு மட்டும்
சிவாஜி - விஜயகுமாரி
நடித்த
பச்சை விளக்கு
கலரி 50 சதம்.

## சேர். துரைசாமிக்கு பிரதிநிதிகள் சபை அஞ்சலி

கொழும்பு, சனி
காலஞ்சென்ற சேர். வைத்திலிங்கம் துரைசாமிக்கு அஞ்சலி செலுத்தும் ஒரு தீர்மானம் இன்று மக்கள் பிரதிநிதிகள்சபையில் நிறைவேறியது. சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வா முதலாவதாக இத்தீர்மானத்தின்மீது பேசுகையில் சேர். வைத்திலிங்கம் சட்டசபையில் சபாநாயகராக இருந்தபொழுது சபை நிகழ்ச்சிகளை மிக கண்ணியமான முறையில் நடத்தியதாகவும் அப்படியான பெருமக்கள் மத்தியிலிருந்தது பெருமைக்குரியதாகும் என்றும் குறிப்பிட்டார்.

எஸ். எல். எவ். பி அங்கத்தவர் தரு. ரி. பி. சுபசிங்க, கம்யூனிஸ்ட்கட்சிப்பிரமுகர் திரு. பீட்டர் கெனமன், தமிழ்க்காங்கிரஸ் திரு. எம். சிவசிதம்பரம், தமிழரசுக்கட்சி திரு. முகம்மதலி சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, இ. தொ. கா. திரு. வி. ஏ. அண்ணாமலை ஆகியவர்களும் காலஞ்சென்றவருக்கு புகழ் அஞ்சலி செலுத்தினார்கள்.

தீர்மானத்தின் நகல்ஒன்று சேர். வைத்திலிங்கம் துரைசாமி குடும்பத்துக்கு அனுப்பும்படி சபாநாயகர் சபை குமாஸ்தாவுக்கு கட்டளை இட்டிருக்கின்றார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## கிளே - கூப்பர் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பின் முதல் தடவையாக லண்டனில் நடைபெறும் அதிபார குத்துச்சண்டையாக அது இருக்கும்.

'ஏர்லிபேர்ட்' வான சஞ்சாரக் கிரகம்மூலம் சண்டை அமெரிக்காவுக்கும் ஐரோப்வுக்கும் டெலிவிஷன் மூலம் காட்டப்படும். இங்கிலாந்து, ஐரோப்பாக் கண்டத்திலுள்ள தியேட்டர்களும் சண்டையை டெலிவிஷன் மூலம் காட்டும்.

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தேன். பஸ்ஸில் ஏகப்பட்ட கூட்டம். ஒரு கை குடைத்தடியில், மற்றக்கை 'எலியோடி'யில். டிக்கட் தந்த கண்டக்டரிடம் எப்படியோ ஓர் இரண்டு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து விட்டேன். மீதிப் பணத்தை அவரிடம் கை நீட்டி வாங்க வேண்டும் என்று நினைத்த போது மனம் திக்கென்றது. என்ன செய்யலாம்? 'பிடி காசை' என்று கண்டக்டர் கூச்சல் போட்டார். வேறு வழியில்லாமல் அவரிடம் கையை நீட்டி மீதிக் காசை வாங்கிக் கொண்டேன்.

கை விசேஷம் வாங்கப் போனவர் வீட்டிலில்லை. சிறிதுநேரம் காத்திருந்துவிட்டு என் தலைவிதியையும் பஞ்சாங்கத்தையும், சகுனங்களையும், பல்லிகளையும், இவ்வையகம் முழுவதையும் மனமரர இரகசியமாகத் திட்டிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தேன்.

மாலையில் ஏதோ சாமான் வாங்குவதற்கு என்னுடைய பர்ஸை ஆராய்ந்த மனையாட்டி 'போன காரியம் வெற்றி போலையிருக்கு!' என்று கிச்சிட்டாள். ஆச்சரியத்துடன் பர்ஸை அவளிடம் வாங்கி எண்ணினேன். இரண்டு ரூபாயில் பஸ்கூலி ஐம்பது சதம் போக ஒன்றரை ரூபாய் இருக்க வேண்டிய இடத்தில் ஒன்பது ரூபாயும் ஐம்பது சதமுமிருந்தது!

பஸ் கண்டக்டர் இரண்டு ரூபாயை பத்து ரூபாய் என்று நினைத்து சில்லறை அளந்து விட்டார் என்று நான் கூறியதை என் கிருஹலக்ஷ்மி நம்பவில்லை.

சகுனங்களில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா, சொல்லுங்கள்!


-வழிப்போக்கன்-

## மகாநாயக்கதேரோ ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள். 20-ந் திகதி இரவு அரசமாளிகையில் மகாநாயக்க தேரோ தங்குவார். 21-ந் திகதி காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து நாகதீபத்திற்குப் புறப்பட்டுச்செல்லல். மாலை 12-30 மணிக்கு நாகதீபத்திலிருந்து திரும்புதல். பிற்பகல் 5-00 மணிக்கு பலாலி விமான நிலையத்திலிருந்து கொழும்பிற்கு மகாநாயக்க தேரோ விசேஷ ஆர். சி. ஏ. எப். விமானம் மூலம் திரும்புவார்.

விளம்பரம்
வர்த்தகர்களே வணக்கம்!
1929-ம் ஆு துவக்கம் கடை ஆரம்பம். உணவுச் சாமானுடன் கயிறுவகை, தேடாமுறுக்கு கயிறு, தும்புத்தடிவகை, ஈக்குத்தடி பொதுவாக தும்பினால் செய்யப்பட்ட சாமான்களும் கடையில் விற்பனைக்குண்டு. வந்து பார்வையிட்டு எங்களை ஆதரியுங்கள் 36 வருட அனுபவம். நல்ல ரகம், குறைந்த விலை. போன்: 420. விலாசம்: 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[illegible]



காலஞ்சென்ற சேர். வைத்திலிங்கம் துரைசாமியின் ஈமச்சடங்குகளில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வந்திருந்த கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா, பதில் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, தேசிய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா ஆகிய மூவரும் மறைந்த தலைவரின் இறுதிச் சடங்குகளைக் கவனித்துக்கொண்டிருக்கையில் எடுத்தபடம்.

## நடிகர் தங்கவேலு மாத இறுதியில் இங்கு வருவார்

யாழ்ப்பாணம், திங்கள்
பிரபல நகைச்சுவை நடிகர் கே. ஏ. தங்கவேலு, அவரது, ஜோடி எம். சரோஜா மற்றும் தங்கவேலு நாடகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களும் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வருகின்றனர்.

கன்னதிட்டிஸ்ரீ காமாட்சி அம்பாள் கோவில்திருப்பணி நிதிக்காக திரு. தங்கவேலு கோஷ்டியினர் யாழ்ப்பாணத்தில் மூன்று நாடகங்கள் நடிப்பார்களென்றும், கண்டி, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் அவர்களது கலைநிகழ்ச்சிகள் நடைபெறுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

'கல்யாணப் பரிசு' படத்தில் எழுத்தாளர் 'பைரவன்' பாத்திரத்தில் நடித்து பெரும் புகழீட்டிய திரு. தங்கவேலு மற்றும் பல தமிழ்ப்படங்களிலும் நடித்திருக்கிறார்.

## தமிழ் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனியாக ஒரு பிரிவு செயல்பட்டுவருவதைச் சுட்டிக் காட்டினார்.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரசாங்கம் ஆதரவும் வசதிகளும் செய்துகொடுத்திருக்கிறது, அதுபோலவே மலேஸிய மக்கள் பேசும் எல்லா மொழிகளுக்கும் ஆதரவளித்து அவைகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வரப்படுகிறதென்று பிரதமர் துங்கு கூறினார் அவர் மேலும் பேசியபோது மலேஸியாவில் இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் ஏராளமான தமிழர்கள் குடியேறியிருக்கிறார்கள். அவர்கள் எமது நாட்டின் அரசியல், சமூகம் மற்றும் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டுத் தொழில் புரிந்துவருகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

மலேஸிய மந்திரிகளில் ஒருவரான திரு. சம்பந்தன் உரைநிகழ்த்துகையில் இந்தோனேஷியாவில் தமிழர்கள் சிறுபான்மையினராகவே இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் அனைவரும் சந்தோஷமாகவும் திருப்தியோடும் வாழ்கிறார்கள் என்றார்.

தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி மலேஷிய பிரதம மந்திரி துங்கு அப்துல் ரகுமான் பத்திரிகையொன்றுக்கு விடுத்துள்ள செய்தியொன்றில், இந்த மகாநாடு மலேஷியாவில் நடைபெறுவதிலிருந்து இங்கு தமிழர்கள் சந்துஷ்டியோடும் சந்தோஷத்தோடும் வாழ்கிறார்கள் என்பதற்கு சான்றாகும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

## தேசிய சேவை உதவி மந்திரி
### உடுப்பிட்டிக்கு இன்று விஜயம்

பருத்தித்துறை, திங்.
உடுப்பிட்டித் தொகுதிக்கு இன்று விஜயம் செய்யும் தேசிய சேவைகள் விளையாட்டுத்துறை உதவி அமைச்சர் காலையில் புலோலி மேற்கில் சிரமதானப் பணியை ஆரம்பித்து வைப்பதுடன் பருத்தித்துறை இ. போ. ச. ஊழியர்களது விளையாட்டுப் போட்டி விழாவிலும் கலந்து கொள்வார் எனவும் கரவெட்டி தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியினரின் புத்தாண்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவிற்கும் தலைமை தாங்கி நடாத்துவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை. ஞாயிறு
சரவணை சேவா மன்றத்தின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. இ வி தளையசிங்கம், காரியதரிசி: திரு. எஸ். எஸ். சிவம், உதவிக் காரியதரிசி: திரு. மா. இலிங்கப்பிள்ளை, தனாதிகாரி: திரு. செ. சி. சம்பந்தன். நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

தேவை
பெற்றோல் விற்பனை நிலயத்திற்கு விற்பனையாளர் தேவை. இரு பாலாரும் (ஆண் பெண்) விண்ணப்பிக்கலாம். பிணைப்பணம் ரூபாய் 1,500/- வே. சோமசுந்தரம், நல்லூர் சந்தை, யாழ்ப்பாணம். 241

## மரண அறிவித்தல்

பிரபல ஆயுர்வேத வைத்தியரும் திருமதி சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், முருகவேள், சோமாஸ்கந்தவேள், குமரவேள் ஆகியோரின் தந்தையாரும் கொக்குவிலைச் சேர்ந்தவருமான திரு. க. செல்வத்துரை அவர்கள் நேற்று சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படிவேண்டப்படுகின்றனர். -செ. முருகவேள்
240

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
ஸ்ரீவிஜயலக்ஷ்மிபிக்சேர்ஸ
நவராத்திரி

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org